TNPSC JOB

**9 R** Register No. [ ]

# அரையாண்டுத் தேர்வு – 2025

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 100

## பகுதி I

I. **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்** 15x1=15

1. தமிழ்விடு தூது ………… என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ. தொடர்நிலைச் செய்யுள் ஆ.புதுக்கவிதை இ. சிற்றிலக்கியம் ஈ.தனிப்பாடல்
2. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ.அகழி ஆ.ஆறு இ. இலஞ்சி ஈ. புலரி
3. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக.
   அ. நல்ல நண்பன் ஆ. இனிய வணக்கம் இ. எந்த ஓவியம்? ஈ. கொடிய விலங்கு
4. தீரா இடும்பை தருவது எது?
   அ. ஆராயாமை, ஐயப்படுதல் ஆ.குணம், குற்றம்
   இ. பெருமை, சிறுமை ஈ. நாடாமை, பேணாமை
5. கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்?
   அ.நஞ்சை நிலம் ஆ.களர்நிலம் இ. உவர்நிலம் ஈ. புஞ்சை நிலம்
6. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் என்பதற்கான எடுத்துக்காட்டு
   அ.தனிச்சிறப்பு ஆ.தைத்திங்கள் இ. வடக்குப்பக்கம் ஈ. நிலாச்சோறு
7. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ.மறுமை ஆ.பூவரசு மரம் இ. வளம் ஈ. பெரிய
8. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?
   அ.தமிழ் ஆ.தெலுங்கு இ. மலையாளம் ஈ. கன்னடம்
9. 'மாடு' என்பதன் பொருள் என்ன?
   அ.கீழே ஆ.மேலே இ.பக்கம் ஈ. தொலைவு
10. பல்லவர்காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று
    அ.மாமல்லபுரம் ஆ.பிள்ளையார்பட்டி
    இ. திரிபுவனவீரேசுவரம் ஈ. தாடிக்கொம்பு
11. 'ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
    இரண்டறிவதுவே அதனொடு நாவே' - இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது? அ.நுகர்தல் ஆ.தொடு உணர்வு இ. கேட்டல் ஈ. காணல்

பின்வரும் பாடலைப் படித்து (12,13,14,15) வினாக்களுக்கு விடையளிக்கவும்

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
    அ.அகநானூறு ஆ.புறநானூறு இ. ஐங்குறுநூறு ஈ. கலித்தொகை
13. இப்பாடலை இயற்றியவர் யார்?
    அ.புலவியனார் ஆ.ஔவையார் இ. கம்பர் ஈ. கபிலர்



TNPSC JOB | www.tnpscjob.com

14. 'யாக்கை' என்பதன் பொருள்?

அ. மரம்    ஆ. கால்    இ. உடல்    ஈ. உயிர்

15. உணவு எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது?

அ. நிலமும் நீரும்    ஆ. நிலமும் வானமும்    இ. நிலம் மட்டும்    ஈ. கடற்கரை

**பகுதி II (மதிப்பெண்கள் 18)**

**(பிரிவு 1)**

II. **எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி (21வது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்கவும்)** 4x2=8

16. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் - குறித்து எழுதுக.
17. ''கூவல்'' என்று அழைக்கப்படுவது எது?
18. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
19. முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்த களத்தில் குன்றுபோலக் குவித்து வைத்த தானியங்கள் எவை?
20. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.
21. ''விடல்'' என முடியும் குறளை எழுதுக.

**பிரிவு 2**

III. **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5x2=10

22. தொடரை பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) கற்றோர்க்குச் சென்ற ...............

ஆ) இளமையில் கல்வி ...............

23. சொல்லுக்குள் சொல் தேடுக

அ) எடுப்பார்கைப்பிள்ளை ஆ) எட்டுக்கால் பூச்சி

24. படிப்போம்; பயன்படுத்துவோம்

அ) Statue    ஆ) Vowels

25. மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும் கருத்தும் ஆ) மேடும் பள்ளமும்

26. பிழை நீக்கி எழுதுக.

அ) குழலியும் பாடத் தெரியும்

ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்

27. திருத்தல் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி III (மதிப்பெண்கள் 18)**

**பிரிவு 1**

IV. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2x3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

31. அறிஞர் அண்ணா தமிழிலும், ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்தின் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்ப ஒளிவரை பல படைப்புகளைத் தந்தவர். தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார்.



TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

அ) அறிஞர் அண்ணா எம்மொழிகளில் வல்லவர்?

ஆ) அறிஞர் அண்ணாவின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.

இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக.

பிரிவு 2

V. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 2x3=6

32. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'காடெல்லாம்' - எனத்தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) 'ஒன்றறி வதுவே' - எனத்தொடங்கும் உயிர்வகை பாடலை எழுதுக.

பிரிவு 3

VI. **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

35. அ) வல்லின மிகுதலின் அவசியத்தை சான்று தந்து விளக்குக.

36. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக.

(கால், எழுதி, அகல்)

அ) எண்ணெய் ஊற்றி .......... விளக்கு ஏற்றியவுடன் இடத்தை விட்டு ............

ஆ) எழுத்தாணி கொண்டு ............ய தமிழை, வைகையில் .......... எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

இ) எனக்கு ...... பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ........ ஈரம் பார்த்து உன் ........ ஐ வை.

37. அ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் நிரப்புக.

i) தவறுகளைத் ............ (திருத்து)

ii) உலகில் மூவாயிரம் மொழிகள் ............ (பேசு)

iii) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ............ (செல்)

பகுதி IV (மதிப்பெண்கள் 25)

VII. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5x5=25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய ''கால்முளைத்த கதைகள்'' (ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.



TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அஞ்சல் அலுவலகத்தில் பணம் பெறும் படிவத்தை நிரப்புக.

42. அ) உன் பெற்றோர் மகிழுமாறு நீ செய்த செயல்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

i) Thinking is great ii) Union is strength

iii) Walk like a bull iv) Love your Food

v) Strengthen the body

## பகுதி V (மதிப்பெண்கள் 24)

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3x8=24

43. அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

45. அ) விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி எழுதுக.

செப்டம்பர் 19 முதல் 28 வரை ஈரோடு சரஸ்வதி மகால் நூலகத்தில் காலை 8 மணிமுதல் 6 மணிவரை புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது. முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் புத்தகத் திருவிழாவைத் தொடங்கி வைக்கிறார். நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியிடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.

''அனைவரும் வாரீர்'' எனப் புத்தகப் பதிப்பாளர்கள் அழைக்கின்றனர்.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.



TNPSC JOB | www.tnpscjob.com

# அஞ்சல் அலுவலகத்தில் பணம்பெறும் படிவத்தை நிரப்புக

## பணம் பெறும் படிவம் (WITHDRAWAL FORM)

Azadi Ka Amrit Mahotsav

**விண்ணப்பப் பக்கம்**

(கணக்கு வைப்பாளரால் நிரப்பப்பட வேண்டும்)

அஞ்சலகத்தின் பெயர்: .................... தேதி ☐☐☐☐☐☐☐☐

கணக்கின் வகை: ☐ SB ☐ TD ☐ MIS ☐ SCSS ☐ NSS இதர ..........

கணக்கு எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

பணம் பெறும் தன்மை: ☐ வட்டி ☐ பணம் பெறுதல்

எனக்கு/தூதுவருக்கு (பெயர் மற்றும் கையெழுத்து கீழே உள்ளது)

மொத்த தொகையாக ரூ. ............................................... (எண்ணில்)

ரூ. ....................................................................... (எழுத்தில்)

வழங்குமாறு வேண்டுகிறேன்.

பரிவர்த்தனைக்கு பிறகு இருப்பு தொகை ரூ. ................... (எண்ணில்)

கணக்கு வைப்பாளர்(கள்)/காப்பாளர் (கள்)-ன் கையொப்பம் (அ) பெருவிரல் ரேகை

தூதுவரின் பெயர். ...........................................................

தூதுவரின் கையொப்பம் ....................................................

கண்க்கு வைப்பாளர் (கள்) -ன் கையொப்பம்
(பணம் தூதுவரின் மூலம் எடுக்கும்பட்சத்தில்)

குறிப்பு:- சேமிப்பு கணக்கில் DBT பயன் பெற ஆதார் உள்ளீடு அவசியம்
(பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை இணைக்கவும்)

அஞ்சல் உதவியாளரின் ஒப்பம் அஞ்சலக அதிகாரியின் ஒப்பம்

குறிப்பு:- பாஸ்புத்தகத்தை இப்படிவத்துடன் சமர்ப்பிக்கவும்

---

Azadi Ka Amrit Mahotsav

**பண வழங்கீடு ஆணை**

(அலுவலக பயன்பாட்டிற்காக மட்டும்)

தேதி : ☐☐☐☐☐☐☐☐

பரிவர்த்தனை எண் ...............................

ரூ. ................................................ (எண்ணில்) ..........................

.............................................................. (எழுத்தில்) வழங்கவும்.

தேதி முத்திரை அஞ்சலக அதிகாரியின் கையொப்பம்

(பற்றொப்பம் (வைப்பாளர் / தூதுவரால் நிரப்பப்பட வேண்டும்)

ரூ. .......................................... (எண்ணில்) ..............................

.................................................................................. (எழுத்தில்)

பெற்றுக்கொண்டேன்.

தேதி .............. கணக்கு வைப்பாளர் / காப்பாளர் / தூதுவர்-ன் கையொப்பம் (அ) பெருவிரல் ரேகை

அலைபேசி எண். ...................... பான் எண். .............. தேவையெனில்

சான்றொப்பமிட்டவர். ........................................ (பெயர் - முகவரி)

(பெருவிரல் ரேகையின் போது சான்றொப்பம் இருப்பது அவசியம்)